இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உமது ஆற்றலே நீதியின் ஊற்று. அனைத்தின் மீதும் உமக்குள்ள ஆட்சியுரிமை அனைத்தையும் வாழும்படி விட்டு வைக்கிறது. மனிதர்கள் உமது வலிமையின் நிறைவை ஐயுறும்போது நீர் உம்முடைய ஆற்றலைக் காட்டுகிறீர்; அதை அறிந்திருந்தும் செருக்குற்றிருப்போரை அடக்குகிறீர். நீர் ஆற்றல் மிக்கவராய் இருப்பதால் கனிவோடு தீர்ப்பு வழங்குகிறீர்; மிகுந்த பொறுமையோடு எங்களை ஆள்கிறீர். ஏனெனில் நீர் விரும்பும் போதெல்லாம் செயல் புரிய உமக்கு வலிமை உண்டு. (சா.ஞா 12:13-15)

# இறையரசின் இரகசியங்கள் எளியோருக்கே வெளிப்படுத்தப்படுகின்றன -திருத்தந்தை

**வத்திக்கான்:**சோர்வுற்றிருப்போர்,மற்றும், ஒடுக்கப்பட்டிருப்போருக்கு இறைவன் வழங்கும் ஆறுதல் என்பது, உளவியல் சார்ந்ததோ, பொருளுதவி சார்ந்ததோ அல்ல, மாறாக, நற்செய்தியைப் பெறுவதிலும் புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதிலும் கிட்டும் மகிழ்ச்சியே ஆகும் என கடந்த ஞாயிறு மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு அன்றைய திருப்பலி நற்செய்தி வாசகம் (மத். 11.25-30), குறித்து நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ்யவர்கள், இந்நாள் நற்செய்தியில் காணப்படும் மூன்று விடயங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இறையரசின் இரகசியங்களை எளியோருக்கு வெளிப்படுத்தியதற்காக தந்தையாம் இறைவனை முதலில் புகழும் இயேசு, இரண்டாவதாக, தனக்கும் தந்தைக்கும் உள்ள தனிப்பட்ட உறவை வெளிப்படுத்துகிறார், மூன்றாவதாக, நாமும் தந்தையை நாடிச்சென்று ஆறுதலைப் பெறுமாறு அழைப்பு விடுக்கிறார் என, தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என, தங்கள் இதயங்களை மூடி வைத்திருக்கும் ஞானிகளும் அறிஞர்களும் இறையரசின் இரகசியங்களை பெறமுடியாத வேளையில், இறைவனில் நம்பிக்கைக் கொண்டு தங்கள் இதயங்களை திறந்து வைத்திருக்கும் எளியோர் அந்த இரகசியங்களைப் பெறுகின்றனர், அவர்களுக்கே அவை வெளிப்படுத்தப்படுகின்றன என்றார்.



இறையன்பு, மற்றும், நற்செய்தி வழங்கும் பேறுகளின் முன்மாதிரியாக இருக்கும் இறைமகன் இயேசு, செல்வம் படைத்தோரையும் அதிகாரத்தில் இருப்போரையுமே உயர்த்திப்பிடிக்கும் இன்றைய உலகில், மனித சமுதாயத்தை, புதிதாக கட்டியெழுப்பும் நற்செய்தியை ஏழைகளுக்கும் எளியோருக்கும் வழங்குபவராக வருகிறார் என மேலும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

இரக்கச் செயல்களை ஆற்றவும், ஏழைகளுக்கு நம்பிக்கையின் நற்செய்தியை வழங்கவும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அழைக்கப்பட்டுள்ளார். அதன் வழியாக மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் மகிழ்ச்சியை, ஏழை எளியோருக்கு தருவதே, இயேசு வழங்கும் அறுதல் எனவும் எடுத்துரைத்து, தன் மூவேளை செப உரையை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், நாம் இவ்வுலகில் காட்டும் பிறரன்பு எத்தனை முக்கியத்துவம் நிறைந்தது என்பதை வலியுறுத்தும் வண்ணம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தி இச்செவ்வாயன்று வெளியானது.

இறுதி தீர்ப்பு நாளின்போது, நாம் நம் கருத்துக்களுக்காகவோ, கொள்கைகளுக்காகவோ தீர்ப்பிடப்படமாட்டோம், மாறாக, நாம் மற்றவர்களுக்கு காட்டிய கருணையின் அடிப்படையில் தீர்ப்பிடப்படுவோம் என்பதை வலியுறுத்தினார்.

# 'அருட்சாதன வாழ்வை மீண்டும் தொடங்குகிறோம்' பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் மேய்ப்புப்பணி அறிக்கை



கிறிஸ்துவில் இனிய அருட்பணியாளர்களே, அருட்சகோதர-சகோதரிகளே, சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து அமைதி மற்றும் அன்பின் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கடந்த சில வாரங்களாக நாம் அனுபவித்த பல இறையாசீருக்கும் அருளுக்கும் வல்லமையுள்ள நம் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். கோவிட்-19 பாதிப்பில் எண்ணிக்கையிலும் , இறப்பு விகிதத்திலும் கணிசமான சரிவைக் கண்டு வருகிறோம். பல கத்தோலிக்கர்கள் திருப்பலி கொண்டாட தங்கள் தேவாலயங்களுக்குத் திரும்புவதிலும் நற்கருணையில் இறைவனைப் பெறுவதிலும் நிம்மதியடையத் தொடங்கியுள்ளனர். நமது சமூகப் பொருளாதார வாழ்க்கையும் பல மாதங்கள் முடக்கப்பட்ட மந்த நிலையிலிருந்து மீண்டு வருகிறது. நம் குழந்தைகள் பாதுகாப்பான முறையில் பள்ளிக்குத் திரும்புவதற்கு ஏற்பப் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுகின்றன.

ஆனால், இவற்றை நடைமுறைப்படுத்த நமக்குப் பல காரணங்கள் இருந்தாலும், நாம் முற்றிலும் இன்னும் ஆபத்தான கட்டத்தைக் கடந்துவிடவில்லை என பொதுச் சுகாதார அதிகாரிகளால் நினைவூட்டப்படுகிறோம். மேலும் நாம் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கடவுள் மீது வைக்கும் அதே வேளையில், விவேகத்தையும் வழிகாட்டி ஆலோசனைகளையும் பொறுப்புடன் கடைபிடிக்க வேண்டும். (தொடர்ச்சி *அடுத்தப்பக்கம்)*

# 'அருட்சாதன வாழ்வை மீண்டும் தொடங்குகிறோம்

*முதல் பக்கத் தொடர்ச்சி...*

குறுகிய காலத்தில் தேவாலயத்திற்குத் திரும்பவும், இறைமக்கள் சமூகத்தில் ஒரு பகுதியாக இணைந்திருப்பதிலும் உங்களில் பலர் துடிப்புடன் இருப்பதை நான் அறிவேன். ஆனால், இந்தத் தொற்றுநோய் மீண்டும் தலைத்தூதுக்குவதைத் தடுக்கவும் நம்மில் மிகவும் எளிதாகப் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாக்கவும், எல்லோரும் பாதுகாப்பாக ஆலயத்திற்குத் திரும்பத் தேவைப்படும் பாதுகாப்பு அம்சங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த நாங்கள் விரும்புவதால், நீங்கள் அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

தேசிய பாதிகாப்பு மன்றம் சார்பாக மாண்புமிகு மூத்த அமைச்சர் டத்தோ ஶ்ரீ இஸ்மாயில் சப்ரி, நேற்று, “ஓர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியிலோ, அல்லது ஜூலை 15 முதல் பள்ளிவாசல்களிலோ மற்ற வழிபாட்டு தலங்களிலோ எத்தனை பேர் கலந்து கொள்ளலாம் என்பதற்கு இனி வரம்பு கிடையாது” என அறிவித்ததாகப் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மாண்புமிகு அமைச்சரின் உரையை நாம் உறுதிப்படுத்தி, இந்த ஊடகச் செய்தி குறித்துத் தெளிவுப்பெற வேண்டும். மேற்கண்ட ஊடக அறிக்கையானது, இப்போது நடப்பிலிருக்கும் சமூகக் கூட்டங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு நடைமுறைகளுக்கு (SOP) முறன்பாடாகவுள்ளதால் நாம் தெளிவப்பெற வேண்டும். பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் இருக்கை அளவு மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதன் மூலம், முன்பு அளிக்கப்பட்ட இரண்டு கட்டுப்பாடுகளையும் சீர்செய்ய வேண்டியுள்ளது.. ஆனாலும் ஒரு மீட்டர் சமூக இடைவெளி தேவை என்ற கட்டுப்பாடு தொடர்ந்து நடைமுறையில் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய காரணங்களுக்காக, நமது தேவாலயங்கள், சிற்றாலயங்கள் மற்றும் திருப்பி கொண்டாட்ட மையங்களில் மூன்றில் ஒரு மடங்கு மக்கள் அனுமதியில் மாற்றம் செய்யப்படவில்லை. சுருக்கமாக, அமைச்சரின் இந்த அறிவிப்பானது நமது தற்போதைய ஏற்பாட்டில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் யார் கலந்துகொள்ள வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பதில் கத்தோலிக்கர்கள் அவரவர் பங்குகள் வகுத்துள்ள வழிகாட்டிகளைப் பின்பற்ற வேண்டும். தேர்வு மற்றும் பதிவு செய்யும் முறை பங்குக்குப் பங்கு மாறுபடக்கூடும்.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு நடைமுறைகளுக்கு (SOP) மற்றும் பேராயரின் வழிகாட்டிகளுக்கு இணங்கவும் அந்தந்தப் பங்குத் தந்தையரின் வழிகாட்டுதலின் கீழ், நமது பங்குகளைப் பாதுகாப்பான வழியில் மீண்டும் திறப்பதற்கு முயற்சித்துள்ள பல்வேறு பங்குகளையும் தன்னார்வலர்களையும் வாழ்த்த விரும்புகிறேன். மீண்டும் திறக்கும் முயற்சியில் கட்டம் 1 முதல் கட்டம் 2 வரை கடந்து செல்லும் போது வெவ்வேறு பங்குகள் வெவேறு காலவரிசையில் செயல்படலாம்.

பல பங்குகள் 3-வது கட்டத்திற்குச் செல்ல தயாராக இருப்பதாக முடிவுசெய்துள்ளன. அங்கு வார இறுதி நாள்களில் திருப்பலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த பங்குகளில் பங்கு சேவை பணிக்குழு நெறிமுறைகளை அமல்படுத்துவது குறித்து விரிவான மறுஆய்வு நடத்துவதற்கும், பங்கு மற்றும் பல்வேறு தன்னார்வப் பணிக்குழுக்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளக்கப்பட்டு, திருப்பலிகள் அதிகரித்த சூழலைக் கருத்தில் கொண்டு கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கட்டம் 2-ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளப்படி சில பங்குகள் வாரத்துக்கு ஒரு பொது திருப்பலி எனும் முடிவைத் தொடர முடிவு செய்துள்ளன. இந்த பங்குகள் முடிந்த வரை, கூடுதலான மக்கள் திருப்பலியில் பங்குபெறுவதை உறுதிசெய்ய வேண்டும் என விரும்புகிறேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அனுமதிக்கப்பட்ட ஒரு திருப்பலியில் குறைந்த இருக்கைகள் மற்றும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, பலரும் ஞாயிறு திருப்பிலயில் கலந்துகொள்ள முடியாது என்பதை நான் உணரந்துள்ளேன். ஞாயிறு திருப்பலிகளில் கலந்துகொள்ள இயலாதவர்களுக்கு ஞாயிறு கடமையிலிருந்து இருந்து விடுவிக்கப்படுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மூன்றாம் கட்டத்திற்குச் செல்ல முடிவு செய்யும் பங்குகளுக்குச் சில கூடுதல் வழிகாட்டிகளை முன்வைக்க விரும்புகிறேன்.

**I) வயது கட்டுப்பாடு**

70 வயதுக்கு மேற்பட்ட முதியோரும் 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் ஆலய வழிபாட்டில் பங்குகொள்ள அனுமதி இல்லை. ஆனாலும், இது ஒரு பொது சுகாதார ஆலோசனையே. ஒரு முழுமையான தடை அல்ல. இந்நோய் தொற்றுவதற்கு இவர்களில் அதிக வாய்ப்பு உள்ளதன் காரணமாக இந்த முறையை உறுதிப்படுத்துகிறேன். ஒருவேளை நீங்கள் இந்த வகைகளின் கீழ் வந்தாலும், திருப்பலியில் கலந்து கொள்ள திட்டமிட்டுள்ளீர்கள் என்றால், உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் மருத்துவரை அணுகி ஆலோசனைப் பெறுங்கள்.

**2.) மலேசிய குடிமக்கள் அல்லாதவர்கள்**

24 ஜூன் 2020 தேதியிடப்பட்ட தேசிய பாதுகாப்பு மன்றத்தின் SOP காரணமாக, மலேசியர் அல்லாத மக்கள் இன்னும் திருப்பலிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை.

**3) குழந்தைகள் திருமுழுக்கு**

பேராயரின் வழிகாட்டுதலின்படி தேவாலயத்தில் குழந்தைகள் திருமுழுக்கு கொண்டாடப்படலாம். ஆனால், இது பொதுத் திருப்பலிக்குப் புறம்பே கொண்டாடப்பட வேண்டும்.

**4) உறுதிப்பூசுதல்**

பங்குகளில் உள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதன கண்டாட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளேன். இதற்கான தேதியை உறுத்திடுத்த வேண்டும். இதுவும் பங்குப் பொதுத் திருப்பலிக்குப் புறம்பே கொண்டாடப்படும்.

**5) திருமணங்களும் இறுதிச் சடங்குகளும்**

இது குறித்த அந்தந்த மாநில சுகாதார இலாக்கவின் விதிமுறைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**6) முதியோர்க்கான கிறிஸ்தவ புகுமுகச் சடங்குமுறை (RCIA)**

பங்குத் தந்தைமார்கள் அந்தந்தப் பங்கில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்குளுக்கு 3-வது கட்டத்தின் கீழ் இக்கொண்டாட்டத்திற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**7) இல்லங்களுக்கு நற்கருணை**

பங்குத் திருப்பலியில் கலந்துகொள்ளும் தகுதியை இழந்தவர்களுக்கு அல்லது பல்வேறு காரணங்களுக்காகத் திருப்பிலயில் கலந்துகொள்ள வேண்டாம் என்று முடிவு செய்யதவர்களுக்கு நற்கருணை எடுத்துச் செல்வது பற்றி இப்போது கருத்துரைப்பது சாத்தியமல்ல. ஆனால், ஒவ்வொரு பங்குத்தந்தையும் இது குறித்துப் பங்கு நற்கருணை பணியாளர்களுடன் கலந்துரையாடல் வழி விவாதித்து முடிவு செய்யலாம்.

**8) மறைக்கல்வி வகுப்புகள், கூட்டங்கள் (பங்கு / அ.த.ச)**

நேரடி சந்திப்பு முறையிலான வகுப்புகள், கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்கள் அடுத்த அறிவிப்பு வரும்வரை அனுமதிக்கப்படவில்லை. அதற்கான முடிவு வரும் வரை அனைவரையும் பொறுமையாக இருக்க வேண்டுகிறேன். ஒரு பங்கை மற்றொரு பங்கோடு ஒப்பிட்டுக் கருத்துரைப்பது நியாயமற்றது. திருஅவையில் போட்டிக்கும் போட்டி மனப்பான்மைக்கும் இடமில்லை என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. நீங்கள அனைவரும் பாதுகாப்பாகவும் தூய்மையாகவும் இருங்கள்.

உங்கள் பேராயர் ஜூலியன் லியாவ்
கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

## கோவிட்-19: WFP அமைப்புக்கு திருத்தந்தை உதவி

கோவிட்-19 கொள்ளைநோய் உருவாக்கியிருக்கும் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவாக, உலக உணவு திட்ட அமைப்பு ஆற்றிவரும் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் விதமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 25,000 யூரோக்களை அந்த அமைப்புக்கு வழங்கியுள்ளார்.



# இறைவனின் தீர்ப்பு கனிவானது

இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்கு உவமைகள் வாயிலாகக் கற்பிக்கின்றார். நல்விதையும் களைகளும், கடுகு விதை மற்றும் புளிப்பு மாவு ஆகிய மூன்று உவமைகள் இன்றைய நற்செய்தி வாசகத்தில் இடம் பெற்றுள்ளன. அதில் வயலில் தோன்றிய களைகள் உவமையை மறை சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

நல்விதைகள் நல்லவர்களுக்கும் களைகள் தீயோருக்கும் அடையாளமாக கூறப்படுகிறது. எனினும் நம்மில் அப்பழுக்கற்ற நல்லவர்கள் யார்? முற்றும் தீய எண்ணம் கொண்டோர் யார்? மனிதக்குலம் இவ்விரு குணங்களைக் கொண்டுதான் செயல்படுகிறது. இயேசுவுடன் பயணித்த யூதாஸ் இஸ்கொரியத்து அவருடன் நெருங்கி இருந்த போதும் துரோகம் செய்யவில்லையா? இறைப் பணியில் திளைத்திருந்த பரிசேயரும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவை இறைமகன் எனக் கண்டறியவில்லை. அதே வேளையில் யூதரே அல்லாத ரோமானிய படையின் நூற்றுவர் தலைவன் இயேசுவின் மேல் கொண்ட நம்பிக்கையால் நற்குணம் கொண்டவராகிறார். இன்றைய நிலையில் ஆலயத்திற்கு தவறாது சென்று இறைப் பணியில் ஈடுபாடு கொண்டவர்கள் புரணி பேசுவதை நாம் கண்டிருக்கிறோம். இறைவனைத் தொழாதவர்கள் அல்லது இறையை நம்பாதவர்கள் நன்மைக்குரிய காரியங்கள் புரிந்து நல்லவர்களாய் திகழ்வதையும் காண்கிறோம்.

இவ்வகையில் நற்குணமும் தீயக்குணமும் கொண்ட நாம் இயேசுவின் உவமைப்படி நல்விதைகளாய் திகழ்கிறோமா அல்லது களைகளாய் உருவெடுத்துள்ளோமா? இரு சாராரையும் வளரவிட்ட பிறகு இதனை கண்டறிவது உலகின் முடிவில் மானிட மகனுக்குரியது என்பதனை பெரும்பாலும் மறக்கின்றோம்.

உவமையில் உள்ள ஊழியரை போன்றே நாமும் உடனுக்குடன் பிறரைத் தீர்ப்பிடும் நோக்கத்தை கொண்டுள்ளோம். நம் பார்வையில் தீயவர்கள் என அடையாள முத்திரைக் குத்தப்பட்டு உடனே புறம் தள்ளும் வேலையில் இறங்கிவிடுகிறோம்.

ஆனால் நாம் எந்த சாராரைச் சேர்ந்திருக்கிறோம் சீர்தூக்கப் பார்ப்பதில்லை. களைகளை ஒன்று சேர்த்து எரிப்பதிலும் நல்விதைகளை களஞ்சியத்தில் சேர்ப்பதிலும் இறைவனுக்கு உள்ள கடினமான பணியை குறித்து சிந்தித்துள்ளோமா? நமது ஒவ்வொருவரின் உள்ளங்களை ஊடுருவி காண வேண்டிய பணி உள்ளதே.

உலகின் முடிவில் அறுவடை நேரத்தில் நீதியை கொண்டே மானிடமகன் தீர்ப்பளிப்பார். ஆயினும் அத்தகைய நேரத்திலும் இரக்கம், பரிவு, கனிவு ஆகியவை அவர் ஆற்றலிலும் வல்லமையிலும் வெளிப்படும் என இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. "நீதிமான் ஈர நெஞ்சத்தினனாய் இருக்க வேண்டும்" என்று அறிவுறுத்துகிறார் இறைவன்.

கடுகு விதையின் விருட்சம் எல்லா வானத்து பறவைகளும் வந்து தங்கக்கூடிய மரமாகிறது. புளிப்பு மாவினால் அனைத்து மாவிலும் புளிப்பேறுகிறது. இறையரசு நாம் நல்லவர் என தீர்ப்பிடும் நபர்களுக்கு சொந்தமானதென்றும், நம் பார்வையில் தீயோர் எனப்படுவோருக்கு புறம்பானதென்றும் எண்ணிவிடலாகாது. இறைவன் பார்வையில் நாம் நல்ல விதையா? களையா? என்பதே முக்கியம்.

*எட்மண்ட் பல்தசார், செராஸ்*

**பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறு**

சா.ஞா 12: 13, 16-19
திபா 86: 5-6. 9-10. 15-16
உரோ 8: 26-27
மத் 13: 24-43

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**